தமிழன் எக்ஸ்பிரஸ்

இதழ் : 15–08 தேதி : 11.03.2010

ஆசிரியர் : ஆர். சிவகுமார்

TAMILAN EXPRESS
A The New Indian Express Group Publication

Marketing Offices

சென்னை : Madan Mohan K
எக்ஸ்பிரஸ் கார்டன்ஸ்,
29, இரண்டாவது பிரதான சாலை,
அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை -600058.
போன் : 044-23457601. பேக்ஸ் : 044-23457619.
92824 38111 kmadanmohan@expressbuzz.com

மதுரை : Dilip TSR
1/2A, சாமியார் தோப்பு,
இராம்நாட் ஹைரோடு, விரகனூர், மதுரை - 625 009.
போன் : 0452-6451093/2311302.
இ.என்.பி.இன் பேக்ஸ் : 0452-2311200
92443 17035 dilip@expressbuzz.com

கோவை : Chandrasekaran M
110, பங்கஜ மில் ரோடு, ராமநாதபுரம்,
கோயமுத்தூர் - 641 045.
போன் : 0422- 2315251/2319766 பேக்ஸ் : 0422-2311320.
92443 17154 chandrasekharan@expressbuzz.com

திருச்சி : Rajesh Menon
பாபா டவர்ஸ் 2-வது புளோர்,
24, தென்னூர் ஹைரோடு, தில்லை நகர்,
திருச்சி - 620017.
போன் : 0431- 6462882/2743492. பேக்ஸ் : 0431-2743499.
9500969405 rajeshmenon@expressbuzz.com

திருநெல்வேலி : Sridhar R
10/6, ஹர்ஷா காம்ப்ளெக்ஸ், 3–வது மாடி,
நார்த் பைபாஸ் சாலை,
வண்ணார்பேட்டை. திருநெல்வேலி–627003.
போன் : 0462–6455889/2501487 பேக்ஸ் : 0462–2501496.
92443 17192 sridhar@expressbuzz.com

வேலூர் : Muniraj M
20, பாலாஜி வணிக வளாகம்,
குரு தோப்பு, ஃபேஸ்–1, சத்துவாச்சாரி,
வேலூர் – 632009.
போன் : 0416–2258402 / 2258403 பேக்ஸ் : 0416–2258420.
92443 17096 muniraj@expressbuzz.com

Delhi : Avnish Singh .. 9212443351
Phone : 237037606. Fax : 011-51555059
avnishsingh@expressbuzz.com

Kolkata : Aloka Kapur ..
Phone : 22430857. Fax : 033-22435814
alokakapur@expressbuzz.com

Mumbai : Amitabh Bishnoi .. 9769521222
Phone : 22882996. Fax : 022-22886954
amitabh@expressbuzz.com

Printed and Published by
R.K. JHUNJHUNWALA on behalf of
Express Publications (Madurai) Ltd.,
at Express Press, "Express Gardens"
29, Second Main Road,
Ambattur Industrial Estate, Chennai - 600058.
Editor: R. Sivakumar

இண்டர்நெட் முகவரி:
http://www.tamilanexpress.com
E-mail ID : tamilanexpress@tamilanexpress.com

# பேய் ஓடுகிறதா?

வைத்தீஸ்வரன் கோயில்... தமிழ்நாட்டில் மட்டுமல்ல, உலகளாவிய புகழை இந்தப், 'பாடல் பெற்ற தலம்' கொண்டுள்ளது. ஜோதிடத்தை நம்புகிறவர்கள், இக்கோயிலை, 'செவ்வாய் கிரக பரிகாரத் தலம்' என்று கருதுகின்றனர். மேலும் இக்கோயில் உள்ள தையல் நாயகி சமேத ஸ்ரீவைத்திய நாதப் பெருமான், தீராத நோய்களையும் தீர்த்தக் கடவுளென ஆன்மீக உலகம், பற்பல நூற்றாண்டுகளாக வலியுறுத்திக் கூறுகிறது. 'மந்திரமும், தந்திரமும் மருந்துமாகித் தீரா நோய் தீர்த்தருள வல்லான்' என்று தேவார மூவரில் ஒருவரான அப்பர் பெருமான் பாடியுள்ளதே இதற்குச் சாட்சி.

ஆனால் வைத்தீஸ்வரன் கோயிலுக்கு சாமி கும்பிட வருபவர்களைப் போலவே அங்கு புழங்கும் நாடி ஜோதிட நிலையங்களை மொய்ப்பவர்களும் அதிகம். பழங்கால ஓலைச் சுவடிகளைக் கொண்டு எந்தவொரு மனிதரின் வாழ்வையும் அலசி ஆராய்ந்து, நேரவிருக்கும் இன்ப-துன்பங்களைப் பட்டியலிட்டு, பரிகாரமும் கூறி வருமானம் பார்க்கும் நாடி ஜோதிடர்கள் இங்கு அதிகம்.



இந்நிலையில் ஒரு தனியார் தொலைக்காட்சி, சமீபத்தில் நாடி ஜோதிடத்தை பற்றி புலனாய்வு செய்து, பல அரிய உண்மைகளை உலகுக்கு எடுத்துரைத்தது. 'இங்குள்ள ஜோதிடர்கள் கூறுவதுபோல் அவர்கள் வசமுள்ள ஓலைகள் தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்திலிருந்து பெறப்பட்டதல்ல; சுற்றியுள்ள சில கிராமங்களில், இந்தச் சுவடிகள் குடிசைத் தொழிலாகத் தயாரிக்கப்படுகின்றன' என்று ஆதாரத்தோடு விளக்கியது அத்தொலைக்காட்சி. இது ஓர் வகையில் உயரிய சமூக சேவை என்பதில் ஐயம் இல்லை.

ஆனால் முற்றிலுமே ஆதாரமில்லாத கற்பனைக் கோலங்களாக நாடி ஜோதிடத்தைப் புறந்தள்ள நம்மால் முடியவில்லை. "சரியான வகையில் பார்த்தால், எனது புனைப்பெயர் 'கண்ணதாசன்' என்றுகூட ஏதோவொரு நாடியில் இருக்கக் கூடும்" என்ற கருத்துபட எழுதியுள்ளார் கவியரசர் கண்ணதாசன்.

அந்தத் தொலைக்காட்சி, சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிக்காகப் பேட்டி கண்ட ஒரு வெளிநாட்டுக்காரர், 'நாடி ஜோதிடத்தில் எனக்கு நம்பிக்கையிருக்கிறது. இதில் கூறியுள்ளபடி எனக்கு நடக்கின்றன' என்றார் தெளிவோடு.

இவற்றை வைத்து ஆராயும்போது, 'பயிர்களென்றால் களைகளும் இருக்கும்; சில சமயம் நற்பயிர்களைவிட அதிகமாகவும் இருக்கும். இதற்காக வயலையே அழிப்பதென்பது முறையாகாது' என்றுதான் நமக்கு எண்ணத் தோன்றியது.

களைகளை அடையாளம் காட்டி அப்புறப்படுத்த வேண்டியது அவசியம். இது வைத்தீஸ்வரன் கோயில் நாடி ஜோதிடத்துக்கும் பொருந்தும். அதே நேரம், வேறொரு சிந்தனையும் நமக்கு எழாமலில்லை. நாம் குறிப்பிட்ட சேனல் என்றில்லாமல், ஏறக்குறைய பல சேனல்கள், பெரும்பான்மை மதம் சார்ந்த நம்பிக்கைகளைக் குறி வைத்தே இது போன்ற நிகழ்ச்சிகளைத் தயாரிக்கின்றன. வேறு பலர், 'பேயை விரட்டுகிறோம்! வறுமையை ஒழிக்கிறோம்' என்றெல்லாம் மேடை போட்டு முழங்குகிறார்கள். அது மாதிரி நிகழ்ச்சிகளில் பங்கேற்பவர்களிடமும் பேட்டி கண்டு, 'பேய் இருந்ததா? ஓடியதா?' என்று எவருமே 'நிஜம்' காண முன் வராதது ஏன்?

– ஆர். சிவகுமார்